## மெட்ரோ சலுகை கட்டணம்

# பஸ் நிறுத்தங்களில் அறிவிப்பு






■ பஸ் நிறுத்தத்தில் வைக்கப்பட்டுள்ள அறிவிப்பு பலகை.

**கீழ்ப்பாக்கம், மார்ச் 17–**

மெட்ரோ ரயில் நிர்வாகம் அறிவித்துள்ள சலுகைகள் குறித்து, பஸ் நிறுத்தத்தில் அறிவிப்பு பலகை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மெட்ரோ ரயில் சேவையை, பெருவாரியான பொதுமக்கள் பயன்படுத்தும் வண்ணம், அதன் கட்டணம் குறைக்கப்பட வேண்டும் என, பயணியர் தொடர்ந்து கோரிக்கை வைத்தனர்.

பயணியரின் கோரிக்கைகளை ஏற்று, சென்னை மெட்ரோ ரயில்வே நிர்வாகம் கட்டணத்தை குறைத்தது. மேலும், மாதாந்திர பயண கார்டுதாரர்களுக்கு சிறப்பு சலுகையாக, 20 சதவீதம் கட்டணம் குறைத்துள்ளது.

மெட்ரோ ரயில்வே நிர்வாகம், பயணியர் வசதிக்காக அளித்துள்ள சலுகைகள் குறித்து அறியும் வகையில், மெட்ரோ ரயில் நிலையம் அருகே உள்ள பஸ் நிறுத்தத்தில் அறிவிப்பு பலகை அமைக்கும் பணியை, ஊழியர்கள் துவங்கியுள்ளனர். குறிப்பாக, பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனை பஸ் நிறுத்தத்தில், சலுகைகள் குறித்து அறிவிப்பு பலகை அமைக்கப்பட்டது.